**செய்தி வெளியீடு எண்: 94** **நாள்: 27.01.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (27.1.2012) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோருக்கான முதலமைச்சர் விருதாக, தலா 1 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும், காமன்வெல்த் ஓப்பன் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவருக்கு சிறப்பு பரிசாக 5 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கினார்கள்.

தமிழகத்தைச் சேர்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி / இயக்குநர் ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் முதலமைச்சர் விருதாக 1 லட்சம் ரூபாய்க்கான பரிசுத்தொகையினை வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது. சர்வதேச மற்றும் தேசிய அளவில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சாதனை புரிந்து நமது மாநிலத்திற்கும் தேசத்திற்கும் பெருமை சேர்க்கும் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர்கள் ஆகியோர் முதலமைச்சர் விருது பெற தகுதியுடையவர் ஆவார்கள்.

இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்த்து அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தால் அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று நாட்டிற்கு பெருமை சேர்ப்பார்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு செயல் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருவதுடன், அவர்களுக்கு ஊக்கத்தொகையை உயர்த்தியும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

2006–2007–ஆம் ஆண்டிற்கான தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கான முதலமைச்சர் விருது சதுரங்கம் விளையாட்டிற்கு திரு.மகேஷ் சந்திரன் பஞ்சநாதன், வளைகோல்பந்து விளையாட்டிற்கு திரு.வி. ராஜா, பளுதூக்குதல் விளையாட்டிற்கு செல்வி சபீனா பானு மற்றும் நீச்சல் விளையாட்டிற்கு செல்வி ஆர். ஐஸ்வர்யா ஆகியோருக்கும்; 2007–2008–ஆம் ஆண்டிற்கான தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கான முதலமைச்சர் விருது பளுதூக்குதல் விளையாட்டிற்கு திரு. ஜி. வீரபத்ரன், தடகளம் விளையாட்டிற்கு திரு.பி. பிரான்சிஸ் சகாயராஜ், ஸ்குவாஷ் விளையாட்டிற்க்காக செல்வி ஜோஸ்னா சின்னப்பா மற்றும் செல்வி தீபிகா பால்லிக்கல் ஆகியோருக்கும்; 2008–2009–ஆம் ஆண்டிற்கான

தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கான முதலமைச்சர் விருது நீச்சல் விளையாட்டிற்கு திரு.ஜெ. அக்னீஸ்வர், பளுதூக்குதல் விளையாட்டிற்கு திரு.வி.ஆர். லட்சுமணன் குமார், நீச்சல் விளையாட்டிற்கு செல்வி எம்.எ. வெண்பா மற்றும் யோகாசனம் விளையாட்டிற்கு செல்வி உபாசன உபாதியாய் ஆகியோருக்கு தலா 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை கொண்ட முதலமைச்சர் விருதுகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி, வாழ்த்தினார்கள்.

அதேபோன்று, 2008–2009–ஆம் ஆண்டிற்கான தலைசிறந்த பயிற்றுநர்களுக்கான முதலமைச்சர் விருதினை கையுந்து பயிற்றுநர் திரு.பி. சுவாமிநாதன் மற்றும் தடகள பயிற்றுநர் திரு. எம்.வி. ராஜசேகர் ஆகியோருக்கும்; தலைசிறந்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கான முதலமைச்சர் விருதினை பாளையங்கோட்டை, தூய சவேரியர் மேல்நிலைப் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் திரு. இ. சேவியர் ரோச் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், தூய ஜான் போஸ்கோ மேல்நிலைப் பள்ளி, உடற்கல்வி ஆசிரியை திருமதி. ஐ. லூர்துமேரி ஆகியோருக்கு தலா 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை கொண்ட முதலமைச்சர் விருதுகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி,பாராட்டினார்கள்.

மேலும், 2010–ஆம் ஆண்டு நடைபெற்ற காமன்வெல்த் ஓப்பன் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றமைக்காக சதுரங்க வீரர் கிராண்ட் மாஸ்டர் திரு.ஆர்.ஆர். லட்சுமண் அவர்களுக்கு சிறப்புப் பரிசாக 5 லட்சம் ரூபாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி கௌரவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து முதலமைச்சர் விருதுகளை பெற்றுக் கொண்ட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோர் தங்களை ஊக்குவிக்கும் விதத்தில் விருதுகளையும் ரொக்கப் பரிசுகளையும் வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 27.1.2012